[ஆ] உறுப்பினர் கொடுத்துள்ள அறிக்கை.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றத்திலே ஏற்கனவே எம். பி. பி. எஸ்., மருத்துவத் துறையில் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி நோட்டீஸ் கொடுக்க வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணன் : ஏற்கனவே கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுத்திருந்தாலும் கொஞ்சம் பொறுத்துப் பார்க்க வேண்டும். உடனடியாக எடுத்துக்கொள்ள முடியாது.

திரு. ரா. கிருஷ்ணன் : நாளைக்கு எடுத்துக்கொள்ளப் படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப்பட்ட ஒரு வாக்குறுதியைக் கொடுக்க முடியாது. எல்லா உறுப்பினர்களுக்கும் அவர்களுடைய தொகுதியைப் பற்றி முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன. நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்ற வாக்குறுதியை கொடுக்க முடியாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[இ] உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்துவது குறித்து.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினை குறித்து உங்கள் மூலமாக அரசிடமிருந்து விடை பெறலாம் என்று விரும்புகிறேன். உட்கார வைத்து விடாதீர்கள். மாநகராட்சி தேர்தல் சம்பந்தமாக இட ஒதுக்கீடு தவறானது என்று நீதி மன்றத்திலே வழக்கு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சம்பந்தமாக பதில் சொல்வதற்கு அமைச்சர் இங்கே இல்லை. நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

1984 மார்ச் 23]

(முற்பகல் 10-10).

திரு. அ. ரகுமான்கான் : எங்களைப் போன்றவர்களுக்கு இதைத் தவிர வேறு வேலை இல்லை. நான் ஒரே ஒரு விளக்கம் மட்டும் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்போது வேண்டுமானாலும் எழுந்து கேள்வி கேட்பது என்பது முறையல்ல. எங்கேயும் அனுமதிக்கப்படுவது கிடையாது. (குறுக்கீடு). நீங்கள் சொல்வது சரியாக இருந்தால் அனுமதிக்கப்படும். இல்லை என்றால், '' எக்ஸ்பஞ்ச் '' செய்துவிடுவேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நான் சொல்வது சரியாக இல்லை என்றால், '' எக்ஸ்பஞ்ச் '' செய்யுங்கள். அதைப் பற்றி கவலையில்லை. நான் விதிகளுக்கு உட்பட்டுத்தான் கேட்கிறேன். ஒரு தகவல் என்ற முறையில், பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை. நகராட்சி மன்றங்களிலே இட ஒதுக்கீடு செய்யப்பட்டது சம்பந்தமாக, தேர்தல் சம்பந்தமாக நீதிமன்றத்திலே வழக்கிருக்கிறது. இன்றைக்குக் கூட பல வழக்குகள் வர இருப்பதாகக் கேள்வி. இதற்கிடையில் தேர்தல் நடக்குமா என்ற சந்தேகம் வெளியிலே இருந்து கொண்டு இருக்கிறது. அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது ? ஒரு வேளை ஸ்டே கொடுத்து விட்டால், முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, பழைய முறைப்படி தேர்தல் நடக்கும் என்று, அதன்படி நடக்குமா ? என்ற தகவலை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே என்ன முக்கியத்துவம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு) தேர்தல் என்றால் எல்லோருக்கும் முக்கியம் தான். நீங்கள் இதற்கு என்று முறையாக நோட்டீஸ் கொடுங்கள். இந்த அவையில் பல வருடங்களாக இருக்கிறீர்கள். நோட்டீஸ் கொடுங்கள், அது தான் முறை. இதற்குப் பதில் சொல்வதற்கு இங்கே அமைச்சர் அவர்கள் இல்லை.